ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஊன்வாட ॥

*This document* has been prepared by*

**Sunder Kidambi**

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:

# ॥ ஊன்வாட ॥

## தில்லைத் திருச்சித்திரகூடம் - 1

‡ஊன்வாட உண்ணாதுயிர் காவல் இட்டு⋆
உடலில் பிரியாப் புலன் ஐந்தும் நொந்து⋆
தாம்வாட வாடத் தவம் செய்ய வேண்டா⋆
தமதா இமையோர் உலகாளகிற்பீர்⋆
கான் ஆட மஞ்ஞைக் கணம் ஆட மாடே⋆
கயல் ஆடு கால் நீர்ப் பழனம் புடைபோய்⋆
தேன் ஆட மாடக் கொடி ஆடு⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (1)

காயோடு நீடு கனி உண்டு வீசு⋆
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம்⋆ ஐந்து
தீயொடு நின்று தவம் செய்ய வேண்டா⋆
திரு மார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பீர்⋆
வாய் ஓது வேதம் மலிகின்ற தொல் சீர்⋆
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த⋆
தீயோங்க ஓங்கப் புகழ் ஓங்கு⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (2)

வெம்பும் சினத்துப் புனக் கேழல் ஒன்றாய்⋆
விரி நீர் முது வெள்ளம் உள்புக்கழுந்த⋆
வம்புண் பொழில் சூழ் உலகன்றெடுத்தான்⋆
அடிப்போதணைவான் விருப்போடிருப்பீர்⋆
பைம்பொன்னும் முத்தும் மணியும் கொணர்ந்து⋆
படை மன்னவன் பல்லவர் கோன் பணிந்த⋆
செம்பொன் மணி மாடங்கள் சூழ்ந்த⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (3)

அருமாநிலம் அன்றளப்பான் குறளாய்⋆
அவுணன் பெரு வேள்வியில் சென்றிரந்த⋆
பெருமான் திருநாமம் பிதற்றி⋆ நுந் தம்
பிறவித் துயர் நீங்குதும் என்னகிற்பீர்⋆
கருமா கடலுள் கிடந்தான் உவந்து⋆
கவை நா அரவின் அணைப் பள்ளியின் மேல்⋆
திருமால் திருமங்கையொடாடு⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (4)

கோ மங்க வங்கக் கடல் வையம் உய்யக்⋆
குல மன்னர் அங்கம் மழுவில் துணிய⋆
தாம் அங்கமருள் படை தொட்ட வென்றித்⋆
தவ மா முனியைத் தமக்காக்ககிற்பீர்⋆
பூ மங்கை தங்கிப் புல மங்கை மன்னிப்⋆
புகழ் மங்கை எங்கும் திகழப்⋆ புகழ் சேர்
சேமம் கொள் பைம் பூம் பொழில் சூழ்ந்த⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (5)

நெய் வாய் அழல் அம்பு துரந்து⋆ முந்நீர்
துணியப் பணிகொண்டணி ஆர்ந்து⋆ இலங்கு
மையார் மணி வண்ணனை எண்ணி⋆ நும் தம்
மனத்தே இருத்தும்படி வாழ வல்லீர்⋆
அவ்வாய் இள மங்கையர் பேசவும் தான்⋆
அரு மா மறை அந்தணர் சிந்தை புக⋆
செவ்வாய்க் கிளி நான்மறை பாடு⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (6)

மௌவல் குழல் ஆய்ச்சி மென் தோள் நயந்து⋆
மகரம் சுழலச் சுழல் நீர் பயந்த⋆
தெய்வத் திரு மா மலர் மங்கை தங்கு⋆
திருமார்பனைச் சிந்தையுள் வைத்தும் என்பீர்⋆
கௌவைக் களிற்றின் மருப்பும் பொருப்பில்⋆
கமழ் சந்தும் உந்தி நிவா வலங்கொள்⋆

தெய்வப் புனல் சூழ்ந்தழகாய⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (7)

மா வாயின் அங்கம் மதியாது கீறி⋆
மழை மா முது குன்றெடுத்து⋆ ஆயர் தங்கள்
கோவாய் நிரை மேய்த்துலகுண்ட மாயன்⋆
குரை மா கழல் கூடும் குறிப்புடையீர்⋆
மூவாயிரம் நான்மறையாளர்⋆ நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி⋆
தேவாதி தேவன் திகழ்கின்ற⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (8)

செரு நீல வேல் கண் மடவார் திறத்துச்⋆
சினத்தோடு நின்று மனத்தால் வளர்க்கும்⋆
அரு நீல பாவம் அகலப் புகழ் சேர்⋆
அமரர்க்கும் எய்தாத அண்டத்திருப்பீர்⋆
பெரு நீர் நிவாவுந்தி முத்தம் கொணர்ந்து⋆ எங்கும்
வித்தும் வயலுள் கயல் பாய்ந்துகள⋆
திரு நீலம் நின்று திகழ்கின்ற⋆ தில்லைத்
திருச்சித்ரகூடம் சென்று சேர்மின்களே (9)

‡சீரார் பொழில் சூழ்ந்தழகாய⋆ தில்லைத்
திருசித்ரகூடத்துறை செங்கண் மாலுக்கு⋆
ஆராத உள்ளத்தவர் கேட்டுவப்ப⋆
அலை நீர் உலகுக்கருளே புரியும்⋆
காரார் புயல் கைக் கலிகன்றி⋆ குன்றா
ஒலி மாலை ஓர் ஒன்பதோடொன்றும் வல்லார்⋆
பாரார் உலகம் அளந்தான் அடிக்கீழ்ப்⋆
பல காலம் நிற்கும்படி வாழ்வர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥